## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹெக்டர் ஹொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிலையம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிலையத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலையத்தின் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிலையத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிலையம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிலையத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுற்றுலா விடுதியொன்றினை நடாத்திக் கொண்டு போவதற்காக தம்புள்ளை பிரதேச செயலாளரிடம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் கையேற்கப்பட்டிருந்த பல்வெகரை சுற்றுலா விடுதிக்காக 2011 திசெம்பர் 12 | ஏற்றுக் கொள்கின்றேன். முன்னே நிதிக் கூற்றுக்களில் குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தப்பட வேண்டிய முழுமையான குத்தகை பணத்தினை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதியிலிருந்து 2019 திசெம்பர் 12 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய ரூபா 1,000,000 க்கான குத்தகை பணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பொருட்களை அப்புறப்படுத்தியதனால் பெறப்பட்ட பணம் ரூபா 5,900 ஆக இருந்த போதிலும், பொருள்களை அப்புறப்படுத்தி விற்ற நட்ட பணமான ரூபா 308,502 பணத்தினை நிதி செயல்பாடுகளின் கீழ் காசு பாய்ச்சப்படுவதாக காசு பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இது நிரந்தர சொத்துக்கான அப்புறப்படுத்தப்பட்ட விற்பனை நட்டம் அல்லாததுடன் பாவனைக்கான பொருள்களின் விற்பனை நட்டமாகும். இந்த நட்டமையான ரூபா 308,502 இனை நிதி செயல்பாடுகளின் கீழ் காசு பாய்ச்சலாக காட்டப்பட்டிருப்பது இக் கொடுக்கல் வாங்கலையும் நடவடிக்கை செயல்பாடுகளின் கீழ் சீராக்கல் செய்யப்பட்டிருப்பத னாலாகும். முன்னால் காட்டப்பட்டுள்ளது போல் காசு பாய்ச்சல் கூற்றில் தகவல்களை முன்வைப்பேன். | காசு பாய்ச்சல் கூற்றில் உண்மையான பெறுவனவுகள் செலுத்தல்கள் மாத்திரம் குறிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | பெல்வெகர சுற்றுலா விடுதியின் பராமரிப்பு செலவினத்திற்காக நிறுவனத்தினால் செய்யப்பட்டிருந்த ரூபா 1,962,545 பணத்தினை தபுள்ளை பிரதேச செயலாளரிடமிருந்து அறவிட வேண்டியதென கணக்கிடப்பட்டிருந்த போதிலும், அப்பணம் நிறுவனத்திடம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. அவ்வாறாயினும், அப்பணம் முதலீட்டு செயல்பாட்டின் கீழ் காசு பாய்ந்து வருகையாக காசு பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | பெல்வெகர சுற்றுலா விடுதிக்காக பணம் கிடைக்காதிருந்த போதிலும், அப்பணம் அறவிடப்பட வேண்டிய பணமாக கணக்கிலிடப்பட்டிருந்தது இப்பணத்தினை அறவிடுதல் பெல்வெகர சுற்றுலா விடுதி எனப்படும சொத்தினது தேய்மானத்தை தள்ளுபடி செய்யப்பட்டதன் பின்னிலான பெறுமதியான படியால் அப்பெறுமதி காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் உண்மையான பெறுவனவுகளும் செலுத்துதல்களும் மாத்திரம் குறிப்பிடல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடன்பட்டோருக்கான மிகதியினுள் 05 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 484,529 க்கான நூலக புத்தகங்கள், சஞ்சிகைகள் தொடர்பான பெறுவனவுகள் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களுக்கு பெற வேண்டிய பணம் மற்றும் மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் ஆகிய 05 மிகுதிகள் இருந்தமையுடன் அம்மிகுதி நிறுவனத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டி இருந்தது. | நிறுவனத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 வருடங்களுக்கு மேலான மிகுதி ரூபா 484,529 ஆகும். அம்மிகுதிகள் அறவிடப்பட்டுக் கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அறவிடப்பட வேண்டிய மிகுதிகளை காலரீதியாக அறவிட்டுக் கொள்ள வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) நி.பி 756 | 2019 ஆம் வருடத்திற்கான நூலக புத்தகங்களுக்கான பொருட் கணிப்பொன்றினை செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய நூலகம் மற்றும் சுவடிகள் சேவை சபையின் ஆலோசனைக்கான சுற்று நிருப இலக்கம் 2004/பு.ச./01 அமைவாக காணாமற் போன புத்தகங்களை இரண்டு வருடத்திற்கு ஒரு முறை எண்ணி கணக்கில் எடுக்க வேண்டும். ஆயினும். முன்னே நி.பி 756 பிரகாரம் வருடாந்தம் நூலக புத்தகங்களை கணிப்புக்குற்படுத்துவேன். ஆயினும், 2019 வருடம் நிதிப் பிரிவு, நூலகப் பிரிவு ஒன்று சேர்ந்து நூலகத்தில் உள்ள புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள தட்டு அலுமாரி வாரியாக தகவல்கள் எடுக்கப்பட்டு | நிதிப் பிரமாணத்திற்கு அமைவாக நூலக புத்தகங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவைகளை வெவ்வேறாக இனங்காண கூடியதாக கணனிமயப்படுத்தப்பட்டது. | |
| (ஆ) | நி.பி 757(2)(அ) | கணிப்பறிக்கையின் படி வேறுபாடு ஏதாவது இருப்பின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அது சம்பந்தமாக விடயங்களை தெளிவு படுத்தி கொள்ளல் வேண்டும். வேறாயின் அது சம்பந்தமாக செயல் பட வேண்டினும் 2011, 2017 மற்றும் 2018 வருடங்களில் மிகை மற்றும் பற்றாக்குறை சம்பந்தமாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினால் நூலக புத்தகங்களுக்கான கணிப்பொன்றினை செய்யப்பட்டிருந்தாலும் புத்தகங்களின் மிகைப்பாடு மற்றும் பற்றாக்குறைக்காக செயற்பட்டிருக்கவில்லை. ஆயினும், 2019 வருடம் முதல் அம்மிகைப்பாடு மற்றும் பற்றாக்குறை தெளிவாக இனங்கண்டு சேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2020 வருடம் நூலக புத்தக கணிப்பு செய்யப்பட்டதன் பின்பு இந்த சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | மிகைப்பாடு மற்றும் பற்றாக்குறை சம்பந்தமாக தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

முன்வைக்கப்பட்ட நிதிகூற்றின் படி, மீளாய்வு வருடத்தில் நிறுவனத்தின் நடவடிக்கை பெறுபேறு ரூபா 2,065,351 ஆனதுடன் அதற்கமைவாக சென்ற வருட பற்றாக்குறை ரூபா 2,301,132 ஆனதால் சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிபெறுபேறுகளில் ரூபா 235,781 க்கான நட்டத்தில் குறைவு அவதானிக்கப்பட்டது. அரசின் சன்மானம் ரூபா 17,270,000 ஆக அதிகரித்தல், ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தல் அலுவல்களுக்கான கிடைக்கப் பெற்ற மூலதன சன்மானம் ரூபா 1,439,449 வினால் குறைவடைதல், கூலி மற்றும் சம்பள செலவு ரூபா 13,219,583 வினால் அதிகரித்தல் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 5,189,738 வினால் அதிகரித்தல் இந்நிதி பெறுபேறுகள் மீது பிரதான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து மீண்டும் இந்நாட்டுக்கு வராமை காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் | 2019 ஆம் வருட ஆரம்பத்தில் வெளிநாட்டு புலமைப்பரிசில் பெறுநர் கடன்பட்டோரின் மிகுதி ரூபா 15,387,897 ஆக இருந்ததுடன் 2019 ஆம் வருடத்தினுள் ரூபா 1,901,629 அறவிடப்பட்டிருந்தது. அதன்படி | கடன்மிகுதியினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதிக்கு அறவிடப்பட வேண்டிய பிணை ஒப்பந்த பெறுமானமான ரூபா 13,486,273 பணத்தினை அறவிடப்படுவதற்கான பயனுள்ள நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய வெளிநாட்டு புலமைப்பரிசில் பெறுநர் கடன்பட்டோரின் மிகுதி ரூபா 13,486,273 ஆக இருக்கிறது. இம்மிகுதியினை அறவிடப்படுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | நிறுவனத்திற்கு சொந்தமான விடுதியின் 05 அறைகள் 2015 மே மாதம் முதல் 2018 யூலை வரை விவசாய அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வசித்து வந்த போதும் அதற்கான வாடகையான ரூபா 8,895,470 பணத்தினை அறவிடப்பட்டிருக்கவில்லை | விவசாய அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் விடுதியில் 05 அறைகளில் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தங்கி இருந்தமைக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் இதுவரை கணக்கிலிடப்படுதல் செய்யப்படவில்லை. முன்னே சகல தகவல்களும் நிர்வாக சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு அதற்கான ஆலோசனைப் படி கணக்குகளில் இந்த அறவிடப்பட வேண்டிய பெறுமதியினை குறிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். | வாடகைக் கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2012 - 2015 கால எல்லையினுள் ரூபா 1,031,020 க்கான கிரயம் செலுத்தப்பட்டு பிரதான அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த உயிரியல் வாயு அலகு 2016 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து இருந்ததுடன் அதனை நீண்ட காலம் திருத்தப்படாது இருந்தமையினால் அதன் உதிரிப்பாகங்கள் செயலிழந்து மீண்டும் பாவனைக்கு எடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. | 2019 மார்ச் 04 ஆந் திகதி நிறுவனத்தின் உத்தியோகத்தரைக் கொண்ட குழு திட்டத்தின் நிகழ்கால நிலைமையை பற்றி கலந்தாலோசித்து இதை முன்னெடுத்து செல்வது பொருளாதார ரீதியாக இலாபகரமானது அல்ல என தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. தற்போதுள்ள நவீன தொழில்நுட்ப முறைக்கு அவ்வமைப்பினை இற்றைப்படுத்துவதும் பொருளாதார ரீதியாக இலாபகரமான நிலையில் இல்லை. இப்போதைக்கு இவ்வமைப்பிற்கு 8 வருட ஆயுட்காலம் கழிந்துள்ளது. | பொருத்தமான முறை யொன்றினை கையாண்டு பாவனை செய்வதற்கோ அல்லது அப்புறப்படுத்துவ தற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாட்சி

### 4.1 வருடாந்த செயல் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாய அபிவிருத்திக்கான தேவைப்பாடுகளை மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு ஆராய்ச்சிக்கான திட்டங்களின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை அடையச் செய்வதற்காக 2019 வருடம் செயற்திட்டத்தினூடாக வெளியீடுகளுக்காக (Publications) ஒதுக்கப்பட்டிருந்த 2.73 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 2019 வருடத்தில் 0.775 மில்லியன் ரூபா மாத்திரம் பாவனை செய்யப்பட்டிருந்ததுடன் ஊடக காரியங்கள் மற்றும் பொதுக் காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டினை எந்தக் காரியங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக கருத்தரங்கு செயல் அமர்வு பொதுச் சொற்பொழிவு என்னும் தலைப்பின் கீழ் 0.75 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு செலவிடப்பட்டிருந்த பணம் 0.253 மில்லியன் ரூபாவாகும். இதற்கான பிரதான காரணி எதிர்பாராத விதமாக நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலாகும். அதோடு கருத்தரங்கு மற்றும் செயலமர்வு போன்ற மக்கள் ஒன்றுகூடும் நிகழ்ச்சிகள் சில மாத காலமாக நடாத்தப்படாததினால் திட்டமிடப்பட்ட வேலைகள் செயல்படுத்த முடியாது போயிற்று. | செயற்திட்டத்திற் கேற்றவாறு காரியங்களை ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் முதன்மை காரியமான ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை செய்வதன் மூலம் உண்டாகும் ஆராய்ச்சி சார் கண்டுபிடிப்புக்கள் மற்றும் புது அறிவுசார் விடயங்களை தேவையான தரப்பினருக்கு (Stake Holders) பெற்றுக் கொடுப்பதற்காக இனங்காணப்பட்ட நிகழ்ச்சிகள் வருடாந்தம் அல்லது ஒரு கால எல்லைக்கொருமுறையேனும் நடாத்தப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் 2017, 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் ஆராய்ச்சி அறிக்கைகள் | ஆராய்ச்சி நூல்களை வெளியிடும் கருத்தரங்குகள் 2017 முதல் 2019 வரையிலான காலத்தினுள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. இதற்கான முன்னெடுக்கப்பட தேவையான ஆலோசனை பெற்றுக்கொடுக்கப்பட்டு செயல் அமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அறிக்கைகளை துரிதமாக வெளியிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கான ஆவணை செய்யப்படும். | செயல்திட்டத்திற் கேற்றவாறு காரியங்களை ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

வெளியிடும் செயற்பாட்டுக்கான செயல் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடுகளும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வுக்கான குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் PED 55 மற்றும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பொது வியாபார சுற்று நிருபப் படி கணக்காய்விற்கான கூட்டங்கள் ஆகக் குறைந்தது 03 மாதத்திற்கொரு முறை நடாத்தப்பட வேண்டியிருந்த போதும், நிறுவனத்தினால் 2017, 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் தலா 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | 2019 வருடம் கணக்காய்வுக் குழு கூட்டம் 03 நடாத்தப்பட்டதுடன் இறுதிக் குழு கூட்டம் அவ்வருடம் திசெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2019 நவம்பர் மாதம் நடந்த சனாதிபதி தேர்தலுக்குப் பின் வந்த புது அரசு அதிகாரத்திற்கு வந்தவுடன் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டதுடன் அக்காரணத்தினால் கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்கான ஆளுநர் சபை உறுப்பினர்களை நியமிப்பதற்கு முடியாது போனது.<br><br>2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் நிறுவனத்தில் நிரந்தர பதிவாளர் ஒருவர் இருக்கவில்லையாதலால் அப்போதைக்கிருந்த பணிப்பாளர்களினால் கண்ககாய்வுக் குழு கூட்டங்கள் நடாத்துவது தவறவிடப்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது. | சுற்று நிருபப் படி கணக்காய்விற்கான கூட்டங்கள் நடாத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |